RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1113

OPEN ACCESS

# பாரதியின் கவிதைகளில் வெளிப்படும் தொலைநோக்குச் சிந்தனைகள் ஓர் ஆய்வு

நா. கிருஷ்ணராஜ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, டாக்டர்.என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்-641048, தமிழ்நாடு, இந்தியா

# A Study of the Visionary Thoughts Expressed in Bharathi's Poems

**N. Krishnaraj** [a, *]

[a] Department of Tamil, Dr.N.G.P. Arts and Science College (Autonomous), Coimbatore–641048, Tamil Nadu, India

* Corresponding Author: krishnaalaisravi@gmail.com

Received: 19-08-2021
Revised: 14-07-2022
Accepted: 23-07-2022
Published: 09-09-2022

Check for updates

**ABSTRACT**

Bharathi was a poet who brought about a renaissance in Tamil literature in the twentieth century. Mahakavi Bharathi was a pioneer not only in literature but also for the betterment of society and the emergence of equality. At a time when traditional poetry was gaining influence, he began to see a change in Tamil literature with a new technique called modern poetry. Poets are naturally proud to be intellectual. In Bharathi, it was abundant. All creators are prophets. He is a divine seer. Not stuck in one field called creativity. Armed with the weapons of creation, he sowed freedom; raised awareness. The majority of poets write with the past and present in mind. Bharathi composed poems with visionary thoughts, considering the welfare of society and the country. This article is a study of the visionary thoughts recorded in his poems, such as women's education, women's rights, science, technological development, anti-superstition, social progress, etc.

**Keywords:** Bharathiyar Poems, Visionary Thoughts, Mahakavi Bharathi, Traditional Poetry

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய கவிஞன் பாரதி. இலக்கியத்தில் மட்டுமின்றி, சமுதாயம் மேம்படுவதற்கும் சமத்துவம் தோன்றுவதற்கும் விடிவெள்ளியகத் தோன்றியவன் மகாகவி பாரதி. மரபுக்கவிதை செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் புதுக்கவிதை எனும் புதிய உத்தியைக் கொண்டு தமிழ் இலக்கியத்தில் மாற்றம் காண விழைந்தான். கவிஞர்களிடம் அறிவுச் செருக்கு இருப்பது இயல்பு. பாரதியிடமோ, அது மிகுதியாகவே இருந்தது. படைப்பாளர்கள் எல்லாம் தீர்க்கதரிசிகள்தான். மகாகவி பாரதியோ, தீர்க்கதரிசிகளுக்கெல்லாம் தீர்க்க தரிசி. அவன் ஒரு திவ்ய தரிசி. படைப்பு என்ற ஒரு துறையோடு முடங்கி விடவில்லை. படைப்புகள் எனும் ஆயுதம் தாங்கி விடுதலைக்கு வித்திட்டான், விழிப்புணர்வூட்டினான். பெரும்பாலான கவிஞர்கள் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் கருத்தில் கொண்டே படைப்புகளை இயற்றுவர். சமுதாயத்தினுடைய, நாட்டினுடைய நலனைக் கருத்தில் கொண்டு, எதிர்காலம் கருதி தொலைநோக்குச் சிந்தனைகளோடு கவிதைகளை இயற்றியவன் பாரதி. பெண்கல்வி, பெண் உரிமை, அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சி, மூடப்பழக்கவழக்க எதிர்ப்பு சமுதாய முன்னேற்றம் முதலான தொலைநோக்குச் சிந்தனைகளைத் தம் கவிதைகளில் பதிவு செய்துள்ளதைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## தொலை நோக்கின் தேவை

தனிமனிதனாக இருந்தாலும் ஒட்டு மொத்த சமுதாயமாக இருந்தாலும் தொலைநோக்குப் பார்வை இன்றியமையாததாகிறது. வாழ்கின்ற வாழ்க்கையென்பது நிகழ் காலத்தை மட்டும் சார்ந்தது அன்று. கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களையும் உள்ளடக்கியதுதான். இதில் எது ஒன்றை விட்டுச் சென்றாலும் வாழ்க்கை முழுமையடையாது. அதனால் எந்தப் பயனும் விளையாது. வாழ்க்கை எனும் நெடும் பயணத்தில் நாம் பயணிக்கத் துவங்கும் வழியாகும். இன்று பணம் என்பதால்தான் எல்லா இடங்களிலும் சிக்கல்களும் ஊழல்களும் ஊற்றெடுத்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஆடைத்தொழில்கள், ஆயுதத் தொழில்கள், காகிதத் தொழில்கள் மற்றும் இரும்புத் தொழில்கள் முதலான எல்லாத் தொழில்களையும் இந்தியாவிலே உருவாக்க வேண்டும் என்பது பாரதியின் ஆசை. தொலை நோக்குப் பார்வையும் திட்டமிடுதலும் வேண்டும் என்பது பாரதியின் கட்டளை. நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் கூட இதுதான் பொருத்தமாக இருக்கும். கடந்தகாலம், நிகழ்காலம் இரண்டையும் அறிந்து தெளிந்தவன் எதிர்காலத்தைத் தீர்மானித்து விடமுடியும். அந்த வகையில் பாரதியும் எதிர்காலம் குறித்து, பல ஆண்டுகளுக்கு முன்பே தொலைநோக்குச் சிந்தனைகளைத் தம் படைப்புகளில் பதிவு செய்துள்ளான். பாரதியின் தொலை நோக்குச் சிந்தனையைப் பற்றி கூற வந்த ம.பொ. சி பின்வருமாறு கூறுகிறார். “விடுதலைப் போரின் தலைமைப் பொறுப்பை காந்தியடிகள் ஏற்கும்வரை விடுதலை பெற்ற இந்தியா எப்படி இருக்கும்; எப்படி இருக்க வேண்டும் என்று இந்திய தேசியத் தலைவர்களில் எவரும் சிந்தித்தது கூட இல்லை. அந்தக் காலத்திலேயே - அதாவது, 1909 இக்கு முன்பே, வறுமை என்னும் படுகுழியில் வீழ்ந்து கிடந்த குடும்பத்தின் தலைவர் - உரிமை வாழ்வை இழந்திருந்த தமிழ்மொழியைப் பயின்ற புலவர் - இந்தியாவின் பூரண சுதந்திரத்தை விரும்பியதோடு, அந்தச் சுதந்திர இந்தியா எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதையும் தம் கவிதைகளில் கற்பனை செய்து காட்டுகிறார்” (Sivagnanam, 1983).

## பெண்கல்வியும் பெண் உரிமையும்

முட்டாள்தனத்திலும் மூட நம்பிக்கைகளிலும் மூழ்கிப் போயிருந்த மானுட சமுதாயத்தை மீட்டெடுக்கத் தோன்றிய தவப்புதல்வன் பாரதி. சாதி, பொருளாதார, பால் பாகுபாடு என்பவற்றால் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. கல்வி கற்கும் உரிமை எல்லோருக்கும் உரியது. அறிவை வளர்க்கும் கல்வி எல்லோருக்கும் பொதுவானது என்று உரிமைக் குரல் கொடுத்தவன் மகாகவி. சமுதாயமென்பது ஆண்- பெண் என எவ்வித வேறுபாடும் இல்லாமல் சேர்ந்து இயங்குகின்ற அமைப்பு. பெண்கள் என்ற காரணத்தினால், கல்வி முதலான உரிமைகளை மறுத்தால், சமுதாயத்தின் பலம் குறைந்துவிடும். பெண்களின் கல்விக்காகவும் பெண்ணுரிமைக்காகவும் முதற்குரல் கொடுத்த கவிஞன் பாரதி. பாரதி பெற்றுத்தந்த உரிமையால் தான் இன்று பெண்கள் சமூகத்தில் மதிக்கத்தக்க நிலையிலும் உயர்ந்த இடங்களிலும் இருக்க முடிகின்றது. ஆண்களுக்கு நிகராக பல துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர். இந்த நிகருக்கு அடிப்படை ஆதாரமே கல்விதான். பல்வேறு மாற்றங்களுக்குட்பட்ட நம் சமுதயத்தில், மேல் தட்டு மக்களைத்தவிர, மற்றவர்களின் குடும்பம், ஓரளவு வறுமையின்றி வாழ கணவன் - மனைவி இருவரும் பணிக்குச் செல்ல வேண்டிய கட்டாயச் சூழலில் இருக்கிறார்கள். அறிவியலும் தொழில் நுட்பமும் பெருகிய இன்று கல்விதான் பெண்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருகிறது. அதோடு தங்கள் குழந்தைகளின் கல்வி குறித்து அறிந்து கொள்ளவும் கற்றுக் கொடுக்கவும் உறுதுணையாக இருப்பதை மறுக்க முடியாது (Bharathiyar, 2006).

“பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி

பேணி வளர்த்திடும் ஈசன்

மண்ணுக் குள்ளே சில மூடர் - நல்ல

மாத ரறிவைக் கெடுத்தார்

கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக்

காட்சி கெடுத்திட லாமோ?"

"பெண்கட்குக் கல்வி வேண்டும்

குடித்தனம் பேணு தற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்

மக்களைப் பேணு தற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்

உலகினைப் பேணு தற்கே!

பெண்கட்குக் கல்வி வேண்டும்

கல்வியைப் பேணு ற்கே!"

என்ற பாரதிதாசனின் பாடல் வரிகள் பெண்கல்வியின் இன்றியமையாமையைப் புலப்படுத்துகிறது (Sundararajan, 2010). உலகில் படைக்கப்பட்ட உயிர்கள் யாவும் சமமே. பிறப்பால் உயர்வு தாழ்வு கிடையாது. அறிவுதான் மனிதனை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும். வரலாற்றில் நீடித்த புகழ் கிடைக்கச் செய்யும். மூடப்பழக்கத்தில் புதையுண்ட சமூகம் கொண்டிருந்த கற்பு என்ற கோட்பாட்டை உடைத்தெறிந்தான். எதிர்காலவியல் குறித்த இந்தச் சிந்தனையால்தான், தற்காலச் சமூகத்தில் பெண்கள் எவ்வித இடையூறும் இன்றி வாழ முடிகிறது.

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார்

இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம்

வற்புறுத்திப் பெண்ணைக் காட்டிக்கொடுக்கும்"

என்ற பாரதியின் வரிகளோடுபிணவ்ரும் உடுமலையாரின் பாடல் வரிகளும் ஒப்பிடத்தக்கது (Bharathiyar, 2006).

"பெண்களிடம் கற்பை எதிர்

பார்க்கும் ஆண்களே!

பெண்களுக்கும் ஆண்களுக்கும்

கற்புப் பொதுவான்றோ?" (Amuthan, 1999)

## அறிவியல் - ஆலைகள் வளர்ச்சி

காலங்கள் செல்லச் செல்ல உலகில் அறிவியல் வளர்ச்சியும் பல் தொழில்நுட்ப மற்றும் ஆலைகளின் வளர்ச்சியும் நாள்தோறும் பெருகிய வண்ணம் இருக்கின்றன. அண்ணல் சென்ற நூற்றாண்டிலேயே இன்று இருக்கும் உலகத்து வளர்ச்சிகள் எல்லாம் எதிர்காலத்தில் நிகழும் என்று அறிந்து, தெளிந்து உரைத்தவன் மாகாகவி. சம கால்ச் சூழலை மட்டும் கருத்தில் கொள்ளாது எதிர் காலச் சூழலையும் கருத்தில் கொண்டு திகழ்ந்தான். தமிழகத்திலிருந்து இலங்கைத் தீவிற்குப் பாலம் அமைத்து, சேது சமுத்திரத்தைச் சீர் செய்து நாம் நாட்டிற்குப் பெருமை சேர்ப்போம். கணிமத் தொழில் முதலான பல்வேறு தொழில்களை நாம் நாட்டிலேயே உருவாக்க வேண்டும் என்பது பாரதியின் கட்டளை. அன்னிய ரிடம் அடிமையாக இருந்த நாம், இந்தியர்கள் என்ற ஒற்றுமையில்தான் போராடினோம். விடுதலை பெற்ற பின் நமக்குள் எந்தப் பிரிவினையும் இருக்கக் கூடாது. காலம் முழுதும் ஒற்றுமையோடு இருக்க வேண்டும். நாம் நாட்டில் நடக்கும் அனைத்துத் தொழில்களும் நேர்மையாக நடைபெற வேண்டும் என்பது பாரதியின் கனவு. பணம் என்பதைக் கருத்தில் கொள்ளும் போதுதான் ஊழல்களும் குற்றங்களும் நிகழும். பண்டமாற்று என்றிருந்தால் இந்தச் சிக்கல்கள் இருக்காது. பண்டமாற்றுதான் சரியான வழியாகும். ஆலை, ஆயுதம், காகிதம், இரும்பு முதலான

அனைத்துத் தொழில்களையும் நாட்டிலேயே உருவாக்கி, பாரதத் திருநாட்டின் பெருமையை உலகுக்கு உணர்த்த முயன்றவன் பாரதி. உலகில் உயிர்கள் நிலை பெற்று வாழ உணவு தேவை. உணவினை உற்பத்தி செய்ய நீர்வளம் தேவை. இன்று இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலங்களும் தம் அண்டை மாநிலங்களுடன் பகைமை பாராட்டுவதற்கான முதன்மைமைக் காரணம் நதிநீர்ப் பிரச்சனை தான்.

"வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்

மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்"

இந்த வரிகளைக் கருத்தில் கொண்டு செயல்பட்டால் இன்று, இந்தியாவில் ஒற்றுமை மேம்படும். எல்லா மாநிலங்களும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவது உறுதியே (Bharathiyar, 2006).

ஓர் ஆண்டிற்கு மேலாக உலகமே 'கொறொனா' என்ற பெருந்தோற்றின் அச்சத்தால் இருந்து வருகிறது. கல்வி, தொழில் முதலான எல்லா நிகழ்ச்சிகளும் அறிவின் கொடையான இணையம் வாயிலாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உலகம் முழுதும் நிகழும் நிகழ்வுகளை நேரலையில் கண்டு மகிழ்கிறோம். இது இன்று நினைவு என்ற போதிலும், அன்று பாரதியின் தொலை நோக்குப் பார்வையின் வடிவமே என்றால் மிகையாகாது.

"காசி நகர்ப் புலவர் பேசுமுறை தான்

காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய் வோம்"

"இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!

யந்திரங்கள் வகுத்திடு வீரே!

கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!

கடலில் மூழ்கிநன் முத்தெடுப்பீரே!" (Bharathiyar, 2006)

## பொதுவுடமை

தொன்று தொட்டு நம்மிடம் இருந்து வரும் பொதுவுடமைச் சிந்தனைதான் மனித சமுதாயம் இன்று வரை நிலைபெற்று வாழவும் உரிமை பெற்று வாழவும் வழிகோலாய்த் திகழ்கிறது. பொதுவுடைமைவாதிகள் இருப்பதால்தான் சமூகத்தில் ஒற்றுமை இருக்கிறது. சமூகத்தில் பொதுவுடமைச் சிந்தனைகள் நிலைத்து இருப்பதற்குப் போராடிய பெருமக்கள் பலர். உயிர்களின் முதன்மையான அடிப்படைத் தேவை உணவு. ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது, அந்த நாட்டில் உள்ள ஒருவரும் கூட, உணவிற்காக யாரிடமும் கையேந்தாமல் வாழ்வதுதான். மக்கள் உணவிற்காக யாரிடமும் கையேந்தாமல் இருக்கும் நாடுதான் வல்லரசு நாடு; வளர்ந்த நாடு ஆகும். வளர்ந்த நாடுகளில் மக்கள் உணவிற்காகப் போராடினால் அது மக்களின் விதி அல்ல. ஒரு சிலரின் சதியே ஆகும்.

"இனியொரு விதிசெய் வோம் - அதை

எந்த நாளும் காப்போம்;

தனியொருவனுக்குணவிலை யெனில்

ஜகத்தினை அழித்திடுவோம"

பொதுவுடமை என்ற போதிலும் பாரதி உணவின் முக்கியத்துவத்தியே பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளான் (Bharathiyar, 2006). பசிக் கொடுமையால் மக்கள் படும் துன்பங்களைக் கண்டு கொதித்தெழுந்தவன் பாரதி. பாரத தேசத்தில் வாழும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும், அவர்கள் குடும்ப உறுப்பினர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யுமளவிற்காவது வேளாண் நிலம் வேண்டும் என்பது மகாகவியின் பேராசை. சிறிதளவு நிலமாக இருந்தாலும் கூட நீர்வளம் எப்போதும் இருக்க வேண்டும் எனச் சிந்தித்தான். மக்கள் அனைவரும் எவ்வித பேதமும் இன்றி கல்வி வளர்ச்சி பெற்று

முன்னேற வேண்டும். கல்வி பெற்ற மக்கள், கல்வி பெறாத மக்களுக்குக் கற்றுதர வேண்டும். நாட்டின் அறியாமையைப் போக்கும் ஒரே கருவி கல்விதான். கல்வி குறித்துச் சாடிய பாரதியின் வினாக்களுக்கான விடையாகத்தான், இன்று வீதிக்கு வீதி கல்விக் கூடங்கள் பெருகிக் கொண்டே உள்ளன. அரசுப் பள்ளிக் கூடங்கள் அல்ல தனியார் கல்வி நிலையங்கள்.

“வீடு தோறும் கலையின் விளக்கம்

வீதி தோறும் இரண்டொரு பள்ளி

நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்

நகர்க ளெங்கும் பலபல பள்ளி

தேடு கல்வியி லததொ ரூரைத்

தீயி னுக்கிரை யாக மடுத்தல்”

பொதுவுடமை பற்றிப் பேசவந்த பாவேந்தரும், பொதுவுடமையை எல்லாத் திசைகளிலும், எல்லா மக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும். அதன் மேன்மையை அறிந்து அதைப் புனிதத் தன்மையோடு பாதுகாப்பது நம் கடமையாகும் என்கிறார் (Bharathiyar, 2006).

“பொது உடமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்

புனிதமோ டதைஎங்கள் யுய்ரென்று காப்போம்” (Bharathidasan, 2006)

## ஒருமைப்பாடும் சமுதாய மேம்பாடும்

பல்வேறு காரணங்களால் பிளவு பட்டிருந்த இந்தியத் திருநாட்டையே ஒன்றுபடுத்த முற்பட்டவன் பாரதி. பெண்ணினத்தை அடிமைப் படுத்தியிருந்த சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினான். ஆண் - பெண் இருவரும் சம உரிமை உடையவர்கள் என்பதோடு எல்லோரும் ஓர் இனம் என்றான். நிலத்தால், நிறத்தால், பிறப்பால், சடங்குகளால், பழக்கவழக்கங்களால், செய்கின்ற தொழிலால் வேறுபட்டிருந்த மனித சமுதாயத்தில் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் வேரூன்றச் செய்து, இந்தியர் என்ற ஒற்றுமை உணர்வை எட்படுத்திய பெருமை பாரதிக்கே உரித்தாகும். எல்லாவற்றையும் பாடுபொருளாகக் கொண்டு பாடிய மாகாகவி, அஃறிணைப் பொருள்கள் மூலமாகவும் ஒற்றுமையை ஏற்படுத்தினான் (Bharathiyar, 2006).

“ஒன்று பட்டால் உண்டு வாழ்வே - நம்மில்

ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே”

“வெள்ளை நிறத் தொரு பூனை - எங்கள்

வீட்டில் வளருது கண்டீர்;

பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை

பேருக் கொருநிற மாகும்

சாம்பல் நிறமொரு குட்டி - கருஞ்

சாந்து நிறமொரு குட்டி

பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்

பாலின் நிறமொரு குட்டி

எந்த நிறமிருந்தாலும் - அவை

யாவும் ஒரேதர மன்றோ?”

என்பதோடு, ஒற்றுமை இருந்தால் மட்டும் போதாது (Bharathiyar, 2006). ஒற்றுமை உடைய சமுதாயத்தில் உலா அறியாமை இருளை அகற்ற எல்லோருக்கும் கல்வி பெற வேண்டுமெனக் கனவு கண்டான்.

“வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு

வாழும் மனிதருக் கெல்லாம்;

பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்

பாரை உயர்த்திட வேண்டும்.” (Bharathiyar, 2006)

## முடிவுரை

இலக்கியப் பணியாகினும் தேசப் பணி ஆகினும் தனக்கென ஒப்பாரும் மிக்கரும் இல்லை நஎன்னும் அளவிற்குப் தன்னலம் சிறிதும் இன்றி சேவையாற்றியவன் பாரதி. தமிழ் இலாக்கிய உலகில் புதுப்புது புது சிந்தனைகளைப் புகுத்தி மாற்றத்திற்கு வழி கோலினான். நிகழ; கல்த்தை மட்டும் கருத்தில் கொண்டு செயல்பட்டால் போதாது. கடந்த காலத்தின் இழ்ப்புகளை எண்ணி, எதிர் காலத்தினைக் கருத்தில் கொண்டு, சமுதாய மேம்பாடிற்கு உழைத்தவன் மகாகவி. இன்றைய பாரத சமுதாய மக்கள் வாழும் வாழ்வு உரிமை யுடையதாய் இருப்பதற்குக் காரணமாகத் திகழ்ந்தவன் பாரதி. இலக்கியம், தேசப் பணி இரண்டிலும் தொலை நோக்குச் சிந்தனைகளோடு செயல்பட்டவான் பாரதியைத் தவிர யாரும் இல்லை. திகொலை நோக்கின் தேவையையும் முக்கியத்துவத்தையும் அறிந்து, சமூகத்திற்கு அறிவித்தான். இன்று பெண்கள் பெற்றிருக்கும் கல்வி முதலான உரிமைகளை அன்றே தொலை நோக்குப் பார்வையோடு எடுத்துக்க் கூறினான். இன்றைய காலத்தில் இருக்கின்ற அறிவுயல் வளர்ச்சி, பல்வேறு ஆலைகள் வளர்ச்சி, நீரியல் மேலாண்மை குறித்து அன்றே சுட்டிக் காட்டினான். பொதுவுடமை, தேச ஒருமைப்பாடு இவற்றிற்கான வழிகளையும் உருவாக்கிக் கொடுத்ததை மறுக்க முடியாது.

## References

Amuthan, (1999) Udumalai Narayana Kavi Padal, Udumalai Narayana Kavi Veeliyeedu, Chennai, India.

Bharathidasan, (2006) Bharathidasan Kavithaikal, Sri Hindu Pathippagam, Chennai, India.

Bharathiyar, (2006) Bharathiyar Kavithaikal Poompuhar Pathippagam, Chennai, India.

Sivagnanam, M.P., (1983) Bharathiyar Pattri Ma.Po.Si, Poongudi Pathippagam, Chennai, India.

Sundararajan, Se., (2010) Kuduba Vilaku, Mulai Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License